சி. செலவீனம்; 783

# உலகச் சிக்கன நாள் விழா 30-10-2009

## வரலாற்று துளிகள்

லார்டு வில்லியம் பெண்டிங் அவர்கள் 1833ஆம் ஆண்டில் அரசு சேமிப்பு வங்கியை பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். 1873ஆம் ஆண்டு அரசு சேமிப்பு வங்கி சட்டம் இயற்றப்பட்டது. இந்தியா முழுவதிலும் அஞ்சலக சேமிப்பு வங்கிகள் 1882ல் திறக்கப்பட்டது. சேமிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்த உலக நாடுகள் 1924ல் பன்னாட்டு சேமிப்பு அமைப்பினை இத்தாலிய நாட்டின் மிலான் நகரில் கூடி ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 31ஆம் நாளை உலகச் சிக்கன நாளாக அனைத்து நாடுகளும் கடைபிடிக்க வேண்டுமென தீர்மானித்தது. பன்னாட்டு சேமிப்பு வங்கி நிறுவனத்தில் உறுப்பினராக இருந்த இந்தியா ஒவ்வொரு ஆண்டும் உலகச் சிக்கன நாளை கொண்டாடி வருகிறது. 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31ஆம் தேதியன்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்டதால், 1985ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் அக்டோபர் 31க்குப் பதிலாக அக்டோபர் 30ஆம் தேதி உலகச் சிக்கன நாள் கொண்டாடப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

## 2. சேமிப்பின் வளர்ச்சி

சுதந்திரத்துக்குப் பின்பு சேமிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்த இந்திய அரசு நிதி அமைச்சகத்தின் கீழ் 1948 இல் தேசிய சேமிப்பு நிறுவனம் என்ற அமைப்பினை நிறுவியது. இந்த நிறுவனத்தின் தலைமையிடம் நாக்பூர் ஆகும். தேசிய சேமிப்பு நிறுவனம் மாநில அரசு மற்றும் அஞ்சல் துறைகளின் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருகிறது. 01.04.2004 முதல் தேசிய சேமிப்பு நிறுவனம் தேசிய சேமிப்பு பயிற்சி நிலையமாக செயல்பட்டு வருகிறது. சேமிப்பின் முக்கியத்துவம் தற்பொழுது அனைவராலும் நன்றாக உணரப்பட்டு, அனைத்து பொருளாதார நிபுணர்களும் வளர்ச்சிப் பணிகளில் முதலீடு அதிகரிக்க, சிறுசேமிப்பு ஒரு தூண்டுகோல் என்று எடுத்துரைத்துள்ளனர். சிறுசேமிப்பு நிகர வசூல் முழுவதையும் நீண்ட கால கடனாக மாநில அரசுகளுக்கு, மத்திய அரசு வழங்கி வருகிறது. மத்திய அரசு 01.04.2002 அன்று முதல் மாநிலத்தில் சேமிக்கும் நிகர வசூல் முழுவதையும் கடனாக அளிக்கிறது. மாநில வரவு செலவுத் திட்டத்திற்கும், அடிப்படை கட்டமைப்பு வசதிகளான சாலை மேம்பாடு, குடிநீர் வசதி, சுகாதாரம் இவற்றை வளப்படுத்தவும் இந்த நிதி உதவி பெரும் ஆதாரமாக விளங்குகிறது.

ஆண்டுதோறும் தமிழகத்தில் சிறுசேமிப்பு நிகர வசூல் விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண். | ஆண்டு | நிகர இலக்கு | மொத்த வசூல் | நிகர வசூல் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | | |
| 1 | 2006–07 | 5700.00 | 10858.97 | 3069.25 |
| 2 | 2007–08 | --- | 7791.11 | (–)965.98 |
| 3 | 2008–09 | --- | 8488.64 | (–)1216.73 |
| 4 | 2009–10 | --- | 4198.24 | (–)62.67 (ஆகஸ்டு / 09 வரை ) |

வங்கிகளில் செய்யப்படும் முதலீட்டிற்கு 2006ஆம் ஆண்டின் அஞ்சலகத் திட்டங்களுக்கு வழங்கப்படும் வட்டி விகிதங்களை விட அதிகமாக வழங்கப்பட்டுள்ளது. வங்கிகளில் நிரந்தர முதலீடுகளுக்கு (ஐந்து வருடம்) வருமான வரி விலக்கும் அளித்திட அரசு அறிவிப்பு வெளியிட்டது. மியூச்சுவல் பண்ட், பங்குச் சந்தை மற்றும் கட்டுமானத் துறைகளில் அபரிதமான வளர்ச்சி தென்பட்டதால் அஞ்சலக சேமிப்புத் திட்டங்களில் முதலீடு கணிசமான அளவு பாதிக்கப்பட்டது. ஆனால், பொருளாதார சரிவு, பங்கு வர்த்தகம் வீழ்ச்சி, வங்கி வட்டி விகிதங்கள் குறைவு போன்ற காரணங்களால் மீண்டும் அஞ்சலகத் திட்டங்களில் முதலீடு அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

நிகர வசூல் மற்றும் வைப்புத் தொகை விவரம்

| வருடம் | நிகர வசூல் | வர்த்தக வங்கிகள் (Commercial Banks) |
|---|---|---|
| 2005-06 | 5594.13 | 19728 |
| 2006-07 | 3069.25 | 29999 |
| 2007-08 | -965.98 | 37505 |
| 2008-09 | -1216.73 | 22772* |

*தற்காலிகமானது

## 3. திட்டங்கள்

அஞ்சலகங்களில் சிறுசேமிப்புத் திட்டங்கள் அஞ்சலக பத்திரம் / பாஸ் புத்தகம் வடிவில் அனைத்து அஞ்சலகங்களிலும், குறிப்பிட்ட தேசிய வங்கிகளிலும் விற்பனை செய்யப்பட்டு பொது மக்களிடம் சேமிப்பு திரட்டப்படுகிறது.

| வ. எண். | முதலீட்டாளர்கள் வகைகள் | திட்டங்கள் |
|---|---|---|
| 1. | விவசாயிகள் மற்றும் அனைத்து தரப்பு மக்களுக்கு – முதலீடு இரட்டிப்பாக | கிஸான் விகாஸ் பத்திரம் |
| 2. | வருமான வரிச்சலுகை பெற திட்டமிடுவோருக்கு | தேசிய சேமிப்பு பத்திரம் 8வது வெளியீடு பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு |
| 3. | மாதாந்திர வருமானமாக வட்டி பெற விரும்புவோருக்கு | அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம் |
| 4. | மாதந்தோறும் சேமிக்க விரும்புவோருக்கு | அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் |
| 5. | வைப்பு கால முதலீடு செய்ய விரும்புவோருக்கு | (1) ஓராண்டு (2) இரண்டாண்டுகள் (3) மூன்றாண்டுகள் மற்றும் (4) ஐந்தாண்டுகள் வைப்பு கால முதலீடு |
| 6. | வட்டியுடன் அன்றாட கணக்கு வைக்க விரும்புவோருக்கு | அஞ்சலக சேமிப்பு வங்கிக் கணக்கு |
| 7. | வயது முதிர்ந்தவர்களுக்கான சேமிப்புத் திட்டம் | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் |

### மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம்

மத்திய அரசு 02.08.2004 முதல் நம்நாட்டின் மூத்த குடிமக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் அனைத்து அஞ்சலகங்களிலும் குறிப்பிட்ட அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 60 வயது நிரம்பிய மூத்த குடிமக்கள் மற்றும் 55 வயதில் விருப்ப ஓய்வு / சிறப்பு விருப்ப ஓய்வு / ஓய்வு பெற்றோர் திட்டத்தில் முதலீடு செய்யலாம்.

## 4. வட்டி விகிதங்கள்

01.03.2003 முதல் சிறுசேமிப்புத் திட்டங்களில் வட்டி விகிதங்கள்

| வ. எண். | சிறுசேமிப்புத் திட்டங்கள் | வட்டி விகிதங்கள் |
|---|---|---|
| 1. | அஞ்சலக மாதாந்திர வருவாய் திட்டம் | 8% |
| 2. | 1 வருட அஞ்சலக கால வைப்புத் திட்டம் | 6.25% |
| | 2 வருட அஞ்சலக கால வைப்புத் திட்டம் | 6.50% |
| | 3 வருட அஞ்சலக கால வைப்புத் திட்டம் | 7.25% |
| | 5 வருட அஞ்சலக கால வைப்புத் திட்டம் | 7.50% |
| 3. | தேசிய சேமிப்பு பத்திரம் – 8வது வெளியீடு | 8% |
| 4. | பொது சேம நலநிதித் திட்டம் | 8% |
| 5. | அஞ்சலக சேமிப்பு வங்கி கணக்கு | 3.5% |
| 6. | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் | 9% |
| 7. | கிஸான் விகாஸ் பத்திரம் | 8 வருடம் மற்றும் 7 மாதங்களில் முதலீடு இரட்டிப்பாகிறது. |
| 8. | 5 வருட அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் | ரூ.10/–க்கு ஒவ்வொரு மாதமும் செலுத்தும் தொகை, 5 வருடத்திற்கு பின் ரூ.728.90 ஆக கிடைக்கிறது. |

மேற்காணும் சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்யும் பணம், பொது மக்களுக்கு, முழு பாதுகாப்பானவை / முழு நம்பகத்தன்மை வாய்ந்தவையாகும். ஏழ்மையில் உள்ள மக்களும் சிறுசேமிப்பில் குறைந்த அளவு ரூ.10/– முதலீடு செய்து கணக்கு துவக்கலாம். வேறு எந்த வங்கி நிறுவனமும் இது மாதிரியான குறைந்த தொகையில் கணக்கு துவக்க அனுமதிப்பதில்லை. தமிழ்நாட்டில் தலைமை, துணை, கிளை அஞ்சலகங்கள் என 12,157 அஞ்சல் நிலையங்களில் அஞ்சலக சேமிப்பு வங்கிகள் செயல்பட்டு வருகிறது.

## 5. சிறுசேமிப்புக்குரிய முகவர் அமைப்பு

சிறுசேமிப்புத் தொகையைத் திரட்டுவதற்கு மாநிலம் முழுவதும் முகவர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் சிறுசேமிப்புத் திட்டத்தை பெருக்குவதிலும், வசூல் பணிகளிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். வெவ்வேறு வகை சேமிப்புத் திட்டங்களுக்காக 3 வகையான முகவரமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 40424 முகவர்கள் முதலீட்டுதாரர்களுக்கு சேவை செய்கின்றனர். இதில் 26360 பேர் மகளிர் முகவர்கள் ஆவர். பொது மக்களிடம் தொடர் வைப்புத் திட்டத்தை ஊக்குவித்து முதலீடு திரட்டுவதில் சேவை புரிகின்றனர். சிறுசேமிப்பு முகவர்கள், நிலை முகவர்கள், மகளிர் முகவர், மற்றும் பொது சேம நல நிதி முகவர் என மூன்று வகையாக உள்ளனர். அம் முகவர்களை, துணை இயக்குநர், சென்னை மாநகராட்சி / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (சிறுசேமிப்பு) / வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோரால் நியமிக்கப்படுவர்.

<u>முகவர்கள் நியமனம் செய்யப்பட்ட விவரம்</u>

| வ.எண் | முகவரமைப்பு வகை | நியமிக்கப்பட்ட திட்டங்கள் | முகவர்கள் விவரம் |
|---|---|---|---|
| 1. | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் | கிசான் விகாஸ் பத்திரம், அஞ்சலக மாத வருவாய் திட்டம், தேசிய சேமிப்பு பத்திரம் VIIIவது வெளியீடு, அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம், மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம். | 12705 |
| 2. | மகளிர் முகவர் திட்டம் (தொடர் வைப்புத் திட்டம்) | அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம் | 26360 |
| 3. | அதிகாரபூர்வமான முகவர்கள் (பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்) | பொது வருங்கால வைப்பு நிதி | 1359 |
| | | கூடுதல் | 40424 |

**முகவர்களுக்கான ஊக்கத்தொகை:-**

முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்காக, அவர்களுக்குக் கீழ்காணும் வீதத்தில் மாநில அரசால் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

| வ. எண் | முகவரமைப்பு வகை | திட்டம் | மத்திய அரசு வழங்கும் தரகுத் தொகை | மாநில அரசு வழங்கும் கூடுதல் ஊக்கத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் | கிசான் விகாஸ் பத்திரம், அஞ்சலக மாத வருவாய் திட்டம், தேசிய சேமிப்பு பத்திரம் VIIIவது வெளியீடு, அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம், மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் | 1% | 0.5% | 1.5% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | மகளிர் முகவர் திட்டம் (தொடர் வைப்புத் திட்டம்) | அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம் | 4% | 2% | 6% |
| 3. | பொது வருங்கால வைப்பு நிதி முகவர் திட்டம் | பொது வருங்கால வைப்பு நிதி திட்டம் | 1% | இல்லை | 1% |
| 4. | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (நிலை முகவர்கள்) | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம். | 0.5% | இல்லை | 0.5% |

முகவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்காக 2008–09 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டிலும், 2009–10 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டிலும் ரூ.25 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## 6. பரிசுகள்

சிறுசேமிப்பு பணியில் சிறந்து விளங்கும் ஆர்.டி.முகவர்கள், அஞ்சல் அலுவலர்கள், சம்பளப் பட்டியல் சேமிப்பு திட்ட குழு தலைவர்கள் ஆகியோருக்கு பரிசுகள் வழங்க நடப்பு நிதியாண்டில் ரூ.28.09 இலட்சம் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. இவ்வாறு வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு, ஒப்பளிப்பு செய்த தொகை அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் பிரித்தளிக்கப்பட்டு உலக சிக்கன நாள் விழாவில் மாவட்ட அளவிலான அனைத்து அனுமதிக்கப்பட்ட பரிசுகளும் / சிறுசேமிப்பு பத்திரங்களாக அந்தந்த மாவட்டங்களில் வழங்கப்படும்.

மாநில அளவில் பரிசுகள் அனைத்து மாவட்டங்களிலும் கீழ்க்கண்ட சிறுசேமிப்புப் பணிகளில் முதன்மை பெற்றவர்களுக்கு வழங்கப்படுகிறது.

அ) சிறந்த மகளிர் முகவர்

ஆ) சிறந்த அஞ்சல் அலுவலர்கள்

இ) சிறந்த சம்பளப் பட்டியல் சேமிப்பு குழுத் தலைவர்

### அ) சிறந்த மகளிர் முகவர்களுக்கான பரிசுகள்

அனைத்து மாவட்டங்களிலும் சிறந்து விளங்கும் சிறுசேமிப்பு மகளிர் முகவர்களுக்கு விருது வழங்க அரசு ரூ.13.22 இலட்சம் பரிசுகள் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது.

## ஆ) அஞ்சல் அலுவலர்களுக்கான பரிசுகள்

சிறுசேமிப்பு வசூல் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்த அஞ்சல் அலுவலர்களுக்கு பரிசுகள் வழங்குவதற்காக அரசு நடப்பு நிதியாண்டில் ரூ.12.97 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்படி ஒவ்வொரு தலைமை அஞ்சலகத்தின் கீழ் இயங்கும் சிறந்த சார்பு அலுவலர், சிறந்த கிளை அஞ்சல் அலுவலர் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்தின் கீழ் உள்ள சிறந்த தலைமை அஞ்சல் அலுவலர், ஆகியோருக்கு மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியரால் பரிசுகள் வழங்கப்படுகிறது.

## இ) சிறந்த சம்பளப் பட்டியல் சேமிப்பு குழுத் தலைவர்களுக்கு பரிசு வழங்குதல்

சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டத்தை திறம்பட செயல்படுத்தும், சம்பளப் பட்டியல் சேமிப்பு குழுத் தலைவர்களுக்கு பரிசுகள் வழங்க அரசு நடப்பு நிதியாண்டில் ரூ.1. 90 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. உலகச் சிக்கன நாளில் இவ்விருது வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். 2007–08 ஆம் நிதியாண்டில் மாநில அளவில் சிறந்து விளங்கும் முதல் மூன்று சம்பளப்பட்டியல் சேமிப்பு குழு தலைவர்களுக்கு முறையே ரூ.5000/– ரூ.3000/– ரூ.2000/– வீதம் மொத்தம் ரூ.10000/– விருதுகள் தேசிய சேமிப்பு பத்திரமாக உலகச் சிக்கன நாள் விழாவில் வழங்கப்படும்.

## 7) விளம்பரம்

மக்களிடையே சிறுசேமிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்த பல்வேறு விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது. செய்தித்தாள், தொலைக்காட்சிகள், கலர் வண்ண துண்டு பிரசுரங்கள், ஸ்டிக்கர்கள் ஒட்டுதல் போன்ற பல்வேறு விளம்பர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசு பொருட்காட்சிகள் குறிப்பிட்ட பெரிய மாநகரங்களில் நடத்தப்படுகின்றன. சிறுசேமிப்பு அரங்கில் அனைத்து கள அலுவலர்கள் மூலமாக துண்டு பிரசுரங்கள் கொடுப்பதன் மூலம் / தகவல் அளிப்பதன் மூலம் விளம்பரப் பிரச்சாரங்கள், பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. மக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்த அனைத்து மாவட்டங்களிலும் நவீன தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்பட்ட சிறுசேமிப்பு திட்டம் குறித்த நாடகங்கள் மற்றும் விளம்பரங்கள், தொலைக்காட்சி (LCD) மூலம் விளம்பரம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நடப்பு ஆண்டு வரவு செலவுத் திட்ட அரசு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப செயல் திட்டத்தின் அடிப்படையில் இவ்விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

P, R, no; 783

# NOTES FOR WORLD THRIFT DAY CELEBRATIONS 30.10.2009

## 1. HISTORICAL PERCEPTIVE :

In the year 1833 Lord William Benting laid the foundations of the **Government Savings Bank for public**. However it was only in the year 1873, the Government Savings Bank Act was passed and Post Office Savings Banks were opened all over India by virtue of the act. The importance of public savings was realized by the International Community and in the year 1924, the International Savings Congress held in Milan, Italy, proclaimed 31st October to be observed by all the countries as " **World Thrift Day** ". India, being a member of the International Savings Bank Institute, Geneva, was celebrating the World Thrift Day every year, on the scheduled date up to the year 1984. In India, it was decided to celebrate the day on 30.10.1985 following the assassination of Honourable Prime Minister, Smt. Indira Gandhi in the year 1984 on 31st October.

## 2. SMALL SAVINGS COLLECTIONS:

The importance of Savings was realized by the Government of India soon after the attainment of Independence and National Savings Organization (NSO) with its head quarters at Nagpur was set up under the Ministry of Finance, Government of India in the year 1948. The National Savings Organization works in close co-ordination with all the State Governments and the Postal Department in promotion of Small Savings. From 1.4.2004 onwards, the National Savings Organization became National Savings Institute. The importance of Savings is well known and is highlighted by all the economists as a necessary ingredient for enhancing investment in development schemes.

### YEAR WISE SMALL SAVINGS COLLECTION

| SL. NO. | YEAR | TARGET | GROSS COLLECTION | NET COLLECTION |
|---|---|---|---|---|
| | | | (Rupees in Crores) | |
| 1 | 2006-07 | 5700.00 | 10858.97 | 3069.25 |
| 2 | 2007-08 | --- | 7791.11 | (-) 965.98 |
| 3 | 2008-09 | --- | 8486.64 | (-) 1216.73 |
| 4 | 2009-10 | --- | 4198.24 | (-) 62.67 **(upto the month of August /2009)** |

Bank interest rate began to rise in 2006 and the Union Budget 2006-07 has provided income tax exemption to fixed deposits for not less than five years made in scheduled banks, positive trend in share market and mutual funds and abnormal raise of properties, there is a negative growth in net collections of Small Savings scheme. However, the global crisis in the financial sector, declining interest rates offered by the banks, negative trend in share market and in mutual funds, the investors may favour the Small Savings Scheme again.

Mobilisation of net deposits and net collections (Rs. in crores)

| Year | Net Collection under Small Savings Scheme | Commercial Banks |
|---|---|---|
| 2005-06 | 5594.13 | 19728 |
| 2006-07 | 3069.25 | 29999 |
| 2007-08 | -965.98 | 37505 |
| 2008-09 | -1216.73 | 22772* |

*Provisional collection.

3. **SCHEMES**: The postal Small Savings Schemes in the form of postal scrip's/ pass books which are being executed in all post offices and selective Nationalized Banks like State Bank of India and its subsidiaries banks and certain Branches of IDBI, ICICI, Vijay Banks, HDFC., etc., to mobilise savings from public.

a) For Farmers and those who prefer multiple of deposit value:

(i) **KISAN VIKAS PATRA**

b) For those who Plan Income Tax concessions:

(i) **National Savings Certificate VIII issue**

(ii) **15 years Public Provident Fund.**

c) For those who prefer monthly interest as regular income:

(i) **Post office Monthly Income Scheme**

d) For those who prefer to save monthly:

(i) **Post Office Recurring Deposit Scheme for General public, Pay Roll Savings Scheme for salary class in Government/Private sectors.**

e) For those who prefer interest in Fixed term Deposit:

(i) **1 year Post Office Time Deposit**
(ii) **2 year Post Office Time Deposit**
(iii) **3 year Post Office Time Deposit**
(iv) **5 year Post Office Time Deposit**

f) For those who prefer to operate account daily with interest Savings Bank account.

g) **Senior Citizen Savings Scheme:** The Government of India have launched a new Small Savings Scheme through all the Post offices which are doing saving bank operations viz "Senior Citizens Savings Scheme –SCSS", with effect from 02.08.2004. An individual who has attained the age of 60 years or above on the date of opening an account or an individual who has attained the age of 55 years or more but less than 60 years and who has retired under superannuation / Voluntary Retirement Scheme / retired can also open and account.

4. **INTEREST RATES** :

The present rates of interest for the Small Savings Schemes are as follows:

| Sl. No. | Name of the Scrip | Revised rate of Interest with effect from 1.03.2003 |
|---|---|---|
| 1 | MONTHLY INCOME SCHEME (MIS) | 8% + 5 % Bonus |
| 2 | 1 YEAR TIME DEPOSIT | 6.25% |
| | 2 YEAR TIME DEPOSIT | 6.50% |
| | 3 YEAR TIME DEPOSIT | 7.25% |
| | 5 YEAR TIME DEPOSIT | 7.50% + Tax Rebate |
| 3 | National Savings Certificate (NSC-VIII) | 8% |
| 4 | Public Provident Fund (PPF) | 8% |
| 5 | Post Office Savings Account (POSA) | 3.5% for individual account |
| 6 | Senior Citizen Savings Scheme (SCSS) | 9% + Tax Rebate |
| 7 | Kissan Vikas Patra (KVP) | Doubles in 8yrs & 7 months |
| 8 | 5 YEARS Post Office Recurring Deposit (PORD) | Rs.10/-per month for 5years becomes Rs.728.90 at the time of maturity. |

All the Postal Small Savings Script's are safe and secure for the public. The minimum amount required to open a post office account is Rs.10/-only. No other financial institutions offer such a minimum requirement of money for opening an account. In Tamil Nadu there are 12157 Post Offices for sale of Small Savings Scrip's to Public. Due to 100% Security of investments, the deposits have increased every year despite reduction of interest rates.

5. **Small Savings Agents and Agent Incentive :**

The Small Savings are mobilized by Small Savings Agents appointed throughout the State. They play a vital role in Small Savings promotion and collections . There are 40424 Small Savings Agents serving the investors in the State of Tamil Nadu of these 26360 agents are women serving to collect monthly deposit under Recurring Deposit accounts only. The Small Savings Agents are categorized as SAS, MPKBY and PPF agents. The SAS /MPKBY/PPF agents are appointed by Deputy Director of Small Savings / Block Development Officers / Personal Assistant to Collectors respectively. 4. The Small Savings are mobilized by Small Savings Agents appointed throughout the State. They play a vital role in Small Savings promotion and collections . Three kinds of Agencies operating under different savings schemes are shown below .

| Sl. No. | Type of Agency | Schemes for which appointed | Total No. of agents |
|---|---|---|---|
| 1 | **Standardized Agency System (SAS)** | Kisan Vikas Patra (KVP),<br>Post Office Monthly Income Scheme (POMIS)<br>National Savings Certificate (NSC) -VIII ISSUE,<br>Post Office Time Deposit (POTD)<br>Senior Citizen's Savings Scheme (SCSS) | 12705 |
| 2 | **Mahila Pradhan Kshetriya Bachat Yojana (MPKBY)** | Post Office Recurring Deposit Scheme (PORD) | 26360 |
| 3 | **Authorized Agents (Public Provident Fund) Scheme(PPF)** | Public Provident Fund (PPF) | 1359 |
| | **Total** | | **40424** |

**Agents' Incentive**

Agents are offered following incentives for their savings mobilization effort.

| Sl. No. | Type of Agents | Savings Products | Govt. of India Commission | Addl. State Govt. Incentive | Total |
|---|---|---|---|---|---|
| 1. | **Standardised Agency System (SAS)** | Kisan Vikas Patra (KVP), Post Office Monthly Income Scheme (POMIS) National Savings Certificate (NSC) -VIII ISSUE, Post Office Time Deposit 1,2,3,5 Year (POTD) | 1% | 0.5 % | 1.5 % |
| 2. | **Mahila Pradhan Kshetriya Bachat Yojana (MPKBY)** | Post Office Recurring Deposit Scheme (PORD) | 4% | 2% | 6% |
| 3. | **Authorised Agents Public Provident Fund Scheme (PPF)** | Public Provident Fund (PPF) | 1% | Nil | 1% |
| 4. | **Senior Citizens' Savings Schemes (SCSS)** | Senior Citizens' Savings Schemes (SCSS) | 0.5% | Nil | 0.5% |

Government has sanctioned Rs.25 Crores for the payment of incentive to the agents in Budget Estimates 2008-09 . In the Budget Estimate 2009-10 also, Government has allocated Rs.25 Crores towards the payment of incentive to the Agents.

6. **AWARDS :**

Government have sanctioned a sum of Rs.28.09 lakhs for implementing award scheme to Small Savings MPKBY Agents, Postal Officials, Pay Roll Savings Scheme Group Leaders for RD Account. Funds budgeted by Government have been distributed to all Districts to utilize for the scheme as per norms prescribed by Government.

1. Awards to best MPKBY (RD) Agents.
2. Awards to Best Pay Roll Savings Scheme Group Leaders.
3. Awards to best Postal Officials.

**i) Awards to best MPKBY (RD) Agent:**

Government have sanctioned a sum of Rs.13.22 Lakhs for awards, to best Agents which includes State Level Awards of Rs.5000/- for MPKBY, District Collectors have initiated action to distribute awards to agents within the Government sanctioned funds distributed to them. During the World Thrift Day Function at Chennai, the Department takes pride in honoring the best agents of the state in the category of MPKBY at State Level involved in Small Savings Collection.

**ii) Awards to Best Pay Roll Savings Group Leaders:**

Government have sanctioned a sum of Rs.1.90 Lakhs for these awards. District Collectors have already initiated action for distribution of these awards at District Level within the Government sanctioned funds on World Thrift Day. The State Level Award is proposed to be given in the World Thrift Day celebrations at Rs.10,000/- (Rs.5000/-, Rs.3000/- and Rs.2,000/-) to the 1st, 2nd and 3rd Group leader respectively.

**iii) Awards to Postal Officials:**

Government have sanctioned Rs.12.97 lakhs for giving awards to the Postal Officials of best Sub Post Office, Branch Post Office under each Head Post Office and best Head Post Office in each District and best Head Post Office, best Sub Post office, in state level.

**7. <u>PUBLICITY</u> :**

The Government of Tamil Nadu is adopting various publicity measures to advertise Small Savings Schemes for motivating public awareness in Small Savings. Advertisement of Small Savings Scheme is done through Post Office Passbooks, News papers and demonstration and Display of Small Savings Scheme through High Definition LCD TV in all Districts and Chennai city. The Government Exhibitions are conducted in selective districts where Small Savings Pavilion is installed in which publicity campaigns are conducted by the field officials by way of distribution of pamphlets and dissemination of information to the public.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.